# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் 18ம் நாள்
2026ம் வருடம் ஜூலை மாதம் 02 ஆம் நாள் வியாழக்கிழமை

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 77/2017

## CNR. No.TNED07-000342-2017

அரசுக்காக
காவல் துறை உதவி ஆய்வாளர்,
புளியம்பட்டி காவல் நிலையம்,
குற்ற எண். 21/2016. ..... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

ராசு (எ) செல்வராஜ் (வயது 50/2016),
த/பெ.ஓதியப்பகவுண்டர்,
கோவில் தோட்டம்,
மாரம்பாளையம்,
காராப்பாடி அஞ்சல்,
சத்திமங்கலம் தாலுகா. ...எதிரி

**Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| | |
|---|---|
| Name of the Police Station and Cr No. | Puliyampatti Police Station, Cr.No. 21/2016 |
| Accused Name | Rasu @ Selvaraj |
| Father / Husband Name | S/o. Othiyappa Gounder |
| Occupation | Coolie |
| Address | Kovil Thottam, Marampalayam, Karappadi Post, Sathiyamangalam Taluk. |
| Age | 50/2016 |

| | |
|---|---|
| Occurrence | 31.01.2016 |
| Complainant | 01.02.2016 |
| Apprehension | 01.02.2016 |
| Released on Bail | 16.02.2016 |
| Commitment | Not Applicable |
| Commencement of trial | 01.07.2026 |
| Closure of trial | 01.07.2026 |
| Sentence or order | Acqittal |
| Service of Copy of Judgment an accused | Nil |
| Explanation of delay | Delayed by both side |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 24.10.2017ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சஞ்சீவ்,பி.பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கு சாட்சிகள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதங்கள் ஆகியவற்றை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. இவ்வழக்கானது புளியம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.21/2016 இ.த.ச.பிரிவுகள் 323, 324, 506(ii) ன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

கடந்த 31.01.2016ம் தேதி மாலை 15.00 மணி சுமாருக்கு புளியம்பட்டி காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட மாரம்பாளையத்திலுள்ள கவுண்டர் கோவில்தோட்டம் எதிரி செல்வராஜ் தோட்டத்திற்கு அருகே உள்ள குஞ்சப்பகவுண்டர் காட்டில் புகார்தாரரின் மகள் சந்திரலேகா மாடு மேய்த்து கொண்டு இருக்கும் போது எதிரி

செல்வராஜ் தன் கையில் வைத்திருந்த மண்வெட்டிபுடியால் காயம்பட்ட சந்திரலேகாவின் வலது கன்னத்தில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், மேலும் எதிரி செல்வராஜ் புகார்தாரரின் மகள் சந்திரலேகாவை அடிக்கும் சத்தம் கேட்டு சென்று எதிரியை தடுத்த போது எதிரி புகார்தாரரை இடது கன்னத்தில் அறைந்து புகார்தாரருக்கு வலி மற்றும் உடல் சோர்வை ஏற்படுத்தியும், மேலும் எதிரி செல்வராஜ் சாட்சி ராமாயாள் மற்றும் சந்திரலேகாவை பார்த்து மாடுமேய்க்க வந்தால் மண்வெட்டியில் வெட்டி புதைத்து விடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்துள்ளார் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

3. இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் சி.சி.எண்: 77/2017 ஆக பிடிகட்டளை கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜரான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச பிரிவு 207 –ன் படி இலவசமாக வழங்கி ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 323, 324, 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து அதனை பற்றி எதிரிக்கு விளக்கி வினவியபோது எதிரி பொய் வழக்கு குற்றவாளி இல்லை என மறுத்து பதிலளித்தும், தனக்கு எதிரான குற்ற முகாந்திரங்களையும் மறுத்துரைத்ததால் எதிரி மீதான இவ்வழக்கில் சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் அரசுத் தரப்பில், இவ்வழக்கின் எதிரி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் சமாதான மனு தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்துள்ளதால் இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 ஆகிய சாட்சிகள் மட்டும் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கின் அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.<u>அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>

இவ்வழக்கின் அ.சா.1 ளையத்தில் வசித்துக்கொண்டு வயதான காரணத்தினால்

வேலை எதும் செய்யவில்லை என்றும், சுமார் 10 ஆண்டுக்கு முன்பு மதிய நேரம் தான் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த போது தோட்டத்திற்குள் சில நபர்கள் வந்து கொண்டிருந்தார்கள் என்றும், தான் யார் என்று கேட்பதற்காக வேகமாக சென்றபோது நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதால் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டு காவல் நிலையம் வந்து எழுத்து மூலமாக புகார் கொடுத்ததாகவும், புகாரில் உள்ள கைரேகை அ.சா.ஆ.1 தன்னுடையது தான் என்றும், அதில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேலும் அ.சா.2 செல்வன் (எ) செல்வராஜ் என்பவர் தன்னுடைய முதல் நிலை சாட்சியத்தில் தான் தற்போது மாரம்பாளையத்தில் வசித்துக்கொண்டு மில்லில் வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 ராமாயாள் தனக்கு தாயார் என்றும், சந்திரலேகா தனக்கு அக்கா என்றும், தனது அக்கா கால் முறிவு ஏற்பட்டு படுத்த படுக்கையாய் நடமாட முடியாமல் இருந்து வருகிறார் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக நேரடியாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. மேலும் அ.சா.3 சுப்பிரமணி என்பவர் தன்னுடைய முதல் நிலை சாட்சியத்தில் தான் தற்போது மாரம்பாளையத்தில் வசித்துக்கொண்டு விவசாய வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 ராமாயாள் தனக்கு சின்னம்மாள் என்றும், சந்திரலேகா தனக்கு தங்கச்சி முறை என்றும், தனது தங்கைக்கு கால் முறிவு ஏற்பட்டு படுத்த படுக்கையாய் நடமாட முடியாமல் இருந்து வருகிறார் என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக நேரடியாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. மேலும் அ.சா.4 பொன்ராஜ் என்பவர் தன்னுடைய முதல் நிலை சாட்சியத்தில் தான் தற்போது ஆணைகட்டியில் வசித்துக்கொண்டு மில்லில் வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில்

உள்ள முதலாவது கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்துக்களை போலிசார் கேட்டுக்கொண்டதற்காக போட்டு கொடுத்ததாகவும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. மேலும் அ.சா.5 பழனிச்சாமி என்பவர் தன்னுடைய முதல் நிலை சாட்சியத்தில் தான் தற்போது மாரம்பாளைய்ததில் வசித்துக்கொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்துக்களை போலிசார் கேட்டுக்கொண்டதற்காக போட்டு கொடுத்ததாகவும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. மேலும் அ.சா.6 அப்பாதுரை புளியம்பட்டி காவல் நிலைய தற்போதைய காவல் துறை உதவி ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் சரோஜா என்பவர் பணி மாறுதல் ஆகி சென்றுவிட்டதால், வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி கடந்த 01.02.2016ம் தேதியன்று உதவி ஆய்வாளர் சரோஜா என்பவர் புளியம்பட்டி காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது, ராமாயள் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் அ.சா.ஆ.6 ஐ பெற்று புளியம்பட்டி காவல்நிலையம் குற்ற எண்.21/2016 இ.த.ச. பிரிவுகள் 323,324,506(I) –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஐ பதிவு செய்தார்.

11. பின்னர் வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு 01.02.2016–ம் தேதி 15.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பொன்ராஜ், பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.8 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஐ தயார் செய்தார் என்றும், மேலும் அதே தேதியன்று அதே

சாட்சியின் முன்னிலையில் 16.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து அ.சா.பொ.1 கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10 மூலமாக கைப்பற்றினார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையுள்ளவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், எதிரியை தேடி வந்த நிலையில் எதிரியை 01.02.2019–ம் தேதி 19.00 மணிக்கு காரப்பாடி பஸ்நிறுத்தம் அருகே வைத்து காவல்துறையினர் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

12. பின்னர் அ.சா. 1 மற்றும் பட்டியல் சாட்சி 2 ற்கு சிகிச்சை அளித்த சத்தி அரசுமருத்துவமனை மருத்துவர் ஹரினி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றார். அ.சா.ஆ.11 சந்திரலேகா என்பவரது விபத்துப்பதிவேடு, அ.சா.ஆ.12 ராமாயாள் என்வரின் விபத்து பதிவேடு, அ.சா.ஆ.13 சந்திரலேகா என்பவரது காயச்சான்றிதழ் ஆகும். பின்னர் கைப்பற்றிய சொத்திற்கு படிவம் –91 அ.சா.ஆ.14 ஐ தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் தனது புலன் விசாரணைக்குப் பின் அ.சா.1 யை எதிரி மண்வெட்டியால் வெட்டி புதைத்துவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்தது தெரியவரவே இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளான இ.தச. 323, 324, 506(1)–ல் இருந்து 323, 324, 506(2)–ல் மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.15ஐ தயார் செய்தார் என்றும், பின்னர் தனது வழக்கு விசாரணை முடித்து 323, 324, 506(2)–ல் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியமாகும்.

13. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி, பொய் வழக்கு என மறுத்து கூறி தன்னுடைய தரப்பில் சாட்சிகள் இல்லை என தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் குறியீடு செய்யப்படவில்லை.

14. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ராமாயாள் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சி அ.சா.2 சந்திரலேகா மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.3 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளார்கள் என்றும், மேலும் இவ்வழக்கின் எதிரியும் புகார்தாரரும் சமரசமாக சென்றுவிட்டதாக எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 320 ன் கீழ் மனுத்தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரியும் சமரசம் ஆகிவிட்டார்கள் என்றும், அதன் காரணமாக பிற சாட்சிகளை விசாரித்து பயனில்லை என்பதால் இவ்வழக்கின் பிற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பில் Dispense செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், அரசு தரப்பில் அ.சா.6 ஆக தற்போதைய புளியம்பட்டி காவல் துறை உதவி ஆய்வாளர் அப்பாதுரை என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1 சான்றுபொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகவே இந்நீதிமன்றம் சட்டப்பிரகாரம் தீர்ப்பு வழங்கும் படி வாதம் செய்யப்பட்டது. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கின் சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளதால் இவ்வழக்கின் காவல் துறை உதவி ஆய்வாளரின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரியை தண்டிக்க இயலாது என்றும், ஆகவே இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

15. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 323, 324, 506(ii) ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>16.தீர்வு</u>

இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 323, 324, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பாட்டிற்கும்

இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ராமாயாள் தன்னுடைய புகார்மனுவில்

**நேற்று 31.01.2016ம் தேதி மாலை சுமார் மூன்று மணி அளவில் என் மகள் சந்திரலேகா பக்கத்தில் உள்ள குஞ்சப்பகவுண்டர் காட்டில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தார். சந்திரலேகா மாடு மேய்தபோது எதார்தமாக மாடு செல்வராஜ் காட்டிற்கு போய் விட்டதால் அவன் அவளிடம் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சத்தம் கேட்டு அந்த இடத்திற்கு போனபோது வாய் தகராறு முற்றி ராசு (எ) செல்வரஜ் தன் கையில் வைத்திருந்த மண் வெட்டியால் என் மகள் சந்திரலேகாவின் வலது கண்ணத்தின் மிது அடித்து விட்டான். அதனால் அவளின் வலது கண்ணம், முன் நெற்றி ஆகிய இடங்களில் ரத்தக்காயமும் மீண்டும் அடிக்க முயன்றபோது இடது கையில் தடுக்க மண் வெட்டி பட்டு இடது முன்னங்கையில் ரத்தக்காயமும் ஏற்பட்டது. இதை பார்த்து நான் அய்யோ புள்ளையை அடிச்சுட்டானே என்று சத்தம் போட்ட தடுக்கப்போன என்னை வலது கையால் இடது கண்ணத்தில் ஓங்கி அறைந்துவிட்டான். நான் தலை சுற்றி மயங்கி உட்கார்ந்து விட்டேன். எங்கள் இருவரையும் பார்த்து மீண்டும் மாடு மேய்க வந்தால் இரண்டு பேரையும் மண்வெட்டியில் வெட்டி புதைத்து விடுவேன் என்று மிரட்டிவிட்டு போய்விட்டான்.**என்று கூறியுள்ளார்.

17. ஆனால் புகார்தாரர் அ.சா.1 ராமாயாள் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில்

**1. நான் தற்போது மாரம்பாளையத்தில் வசித்துக்கொண்டு வயதான காரணத்தினால் வேலை எதும் செய்யவில்லை . சுமார் 10 ஆண்டுக்கு முன்பு மதிய நேரம் நான் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த போது தோட்டத்திற்குள் சில நபர்கள் வந்து கொண்டிருந்தார்கள். நான் யார் என்று கேட்பதற்காக வேகமாக சென்றபோது நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டேன் அதனால் எனக்கு காயம் ஏற்பட்டது.**

**2. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்கை எடுத்துகொண்டு காவல் நிலையம் வந்து எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள ரேகை மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.**என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18. ஆகவே இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட சாட்சியான புகார்தாரர் அ.சா1 ராமாயாள் தன்னுடைய முதல்நிலை சாட்சியத்தில் புகார்மனுவில்

கூறியுள்ள விபரங்களுக்கு மாறாக சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட மற்றொரு பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சந்திரலேகா என்பவருக்கு உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கையாக இருப்பதால் இவ்வழக்கின் அரசு தரப்பில் அவரை விசாரணை செய்யாமல் Dispense செய்யப்பட்டுள்ளார். மேலும் இவ்வழக்கின் அரசு தரப்பில் இவ்வழக்கு சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 செல்வன் (எ) செல்வராஜ், அ.சா.3 சுப்பிரமணி மற்றும் இவ்வழக்கின் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான அ.சா.4 பொன்ராஜ், அ.சா.5 பழனிச்சாமி ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சிகளாக மாறியுள்ளார்கள்.

19. ஆகவே இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு இவ்வழக்கை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் எதிரி தரப்பில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 ராமாயாள் என்பவருடன் இவ்வழக்கின் எதிரி சமரசம் ஆகிவிட்டதாக கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் இந்நீதிமன்றத்தில் MP.No.2/2026 மனுதாக்கல் செய்து மேற்படி மனுவினை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. ஆகவே இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரியும் இவ்வழக்கு பிரச்சனை சம்மந்தமாக ஏற்கனவே சமரசம் ஆகிவிட்டது தெரியவருகிறது. மேலும், இவ்வழக்கின் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.6 தற்போதைய புளியம்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அப்பாதுரை என்பருடைய சாட்சியத்தை மட்டும் வைத்து கொண்டு இவ்வழக்கின் எதிரி இவ்வழக்கில் கூறியுள்ள குற்றத்தை புரிந்ததாக எடுத்துக்கொள்ள இயலாது. காரணம் அவர் ஆவணங்களை மட்டும் பார்த்து சாட்சியம் அளித்துள்ள பதவி நிலை சாட்சி ஆவார். ஆகவே இவ்வழக்கின் அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை எவ்வித ஐயப்பட்டிற்கும் இடமின்றி தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. ஆகவே, இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை விடுதலை செய்வது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள் 323, 324, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டை எவ்விதமான ஐயப்பட்டிற்கும் இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால் இவ்வழக்கின் எதிரியை குற்றவாளி அல்ல என முடிவு செய்து இவ்வழக்கின் எதிரியை கு.வி.மு.ச.248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22. இவ்வழக்கிற்காக எதிரியால் இயற்றி கொடுக்கப்பட்ட பிணைமுறி பத்திரம் மேல்முறையீடு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லையெனில் தானாகவே ரத்து ஆகிவிடும்.

23. இவ்வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 ஆன கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்று பி.ஆர்.எண். 58/2016 ன் கீழ் இந்நீதிமன்ற பாதுகாவலில் இருந்து வருகிறது. மேற்படி பொருள் உதவாத பொருள் என்பதால் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு மேல்முறையீடு இல்லையெனில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.07.02 05:38:26 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 01.07.2026 | திரு. ராமாயாள் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 01.07.2026 | திரு. செல்வன் (எ) வெல்வராஜ் (கேள்விநிலை சாட்சி) |
| அ.சா.3 | 01.07.2026 | திரு. சுப்பிரமணி (கேள்விநிலை சாட்சி) |
| அ.சா.4 | 01.07.2026 | திரு. பொன்ராஜ் (பார்வை மகஜர் மற்றும் வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) |
| அ.சா.5 | 01.07.2026 | திரு. பழனிச்சாமி (பார்வை மகஜர் மற்றும் வரைபடம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) |
| அ.சா.6 | 01.07.2026 | திரு. அப்பாதுரை (தற்போதைய காவல் துறை உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 01.02.2016 | புகார்மனுவில் உள்ள அ.சா.1 ராமாயாள் என்பவரின் கைரேகை |
| அ.சா.ஆ.2/அ.சா.4 | 01.02.2016 | பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள அ.சா.4 பொன்ராஜ் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.3/அ.சா.4 | 01.02.2016 | கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள அ.சா.4 பொன்ராஜ் என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.4/அ.சா.5 | 01.02.2016 | பார்வை மகஜர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள அ.சா.5 பழனிச்சாமி என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.5/அ.சா.5 | 01.02.2016 | கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள அ.சா.5 பழனிச்சாமி என்பவரின் கையெழுத்து |
| அ.சா.ஆ.6/அ.சா.6 | 01.02.2016 | புகார் மனு |
| அ.சா.ஆ.7/அ.சா.6 | 01.02.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8/அ.சா.6 | 01.02.2016 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9/அ.சா.6 | 01.02.2016 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10/அ.சா.6 | 01.02.2016 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.11/அ.சா.6 | 31.01.2016 | சந்திரலேகா என்பவரின் விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.12/அ.சா.6 | 31.01.2016 | ராமாயாள் என்பவரின் விபத்து பதிவேடு |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.13/அ.சா.6 | 31.01.2016 | சந்திரலேகா என்பவரின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.14/அ.சா.6 | 01.02.2016 | படிவம் 91 |
| அ.சா.ஆ.15/அ.சா.6 | 01.02.2016 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்று பொருள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.பொ.1/அ.சா.6 | - | கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி ஒன்று |

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:-** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருள்கள் :-** இல்லை

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.07.02 05:38:39 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

**குறிப்பு.**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி ஜாமினில் இருந்தார்.

2)எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT AT SATHYAMANGALAM

## CASE SUMMARY

## CC.NO.77/2017

| Period of Remand of accused | The date of filling of the complaint/ final Report in the court | The date of committal of the case to the court of sessions | The date of questioning of the accused U/s.228, 240, 246 and 251 of the code of criminal procedure the case maybe | Filling of all miscellaneous petition and the result including the result on challange before superior court except routine petitions like petitions U/s. 317 of the code | Date of examination in chief and cross examination of the witness | | | Date of examination of the accused U/s. 313 of the code | Date of upsconder of accused and his appearance/production as the case maybe | Grand of stay by superior court and the results thereof |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.02.2016-16.02.2016 | 24.10.2017 | Nil | 08.12.2022 | CMP No.715/2016 Petition allowed MP.No.2/2026 petition dismissed | Pws/ Dws | Chief | Cross | 02.07.2026 | - | - |
| | | | | | Pw1 | 01.07.2026 | - | | | |
| | | | | | Pw2 | 01.07.2026 | - | | | |
| | | | | | Pw3 | 01.07.2026 | - | | | |
| | | | | | Pw4 | 01.07.2026 | - | | | |
| | | | | | Pw5 | 01.07.2026 | - | | | |
| | | | | | Pw6 | 01.07.2026 | 01.07.2026 | | | |

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.07.02 05:38:48 +0530

Judicial Magistrate,
Sathyamangalam